2nd March 1961]

SRI K. VINAYAKAM: Are we left to the predicament of purchasing this from a private company? Why not Government import the chasis through the Government of India?

THE HON. SRI R. VENKATARAMAN: We are trying to develop local industry. Ashok Leyland are getting these things in completely knocked down condition and they are manufacturing nearly 50 per cent of the parts now. I do not think we need revert to the 19th century method of importing chassis.

SRI C. R. RAMASWAMI: *நாம் வாங்கிய விலைக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டா?*

THE HON. SRI R. VENKATARAMAN: *அதைவிடச் சற்றுக் குறைவானது.*

SRI M. KALYANASUNDARAM: *எந்த எந்த ரக வண்டிகள் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது?*

THE HON. SRI R. VENKATARAMAN: *1958-ம் வருஷத்தில் இரண்டே இரண்டு மாடல்—லேலண்டு, மெர்ஸிடஸ் பென்ஸ்-தான் வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. பல ரக வண்டிகள் இருந்தால் ஒவ்வொன்றுக்கும் "ஸ்பேர் பார்ட்ஸ்" வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. இந்த இரண்டே இரண்டு மாடல் என்றால் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது சௌகரியமாக இருக்கும் என்று இப்படிச் செய்யப்பட்டது. இரண்டாவது காரணம் ஓரிரு ரக வண்டிகளை மட்டும் ரிப்பேர் செய்வது என்றால் டெக்னிகல் ஸ்கில் அதிகமாகும். ஆகையால் இந்த இரண்டு ரகத்தைமட்டும் வாங்குவது என்று தீர்மானித்தோம்.*

Handloom

*** 525 Q.—SRI A. VEDARATHNAM:** *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சேலத்தில் கைத்தறி தொழில் நுட்ப கழகம் துவக்கப் பட்டிருக்கிறதா?

(இ) இங்கு கைத்தறித் தொழிலில் நூதனமாய் என்ன செய்யப்படுகிறது; அதன் முழு விவரமென்ன?

(உ) கதர்த் தொழிலுக்கு இதில் இடமுண்டா; அதன் விவர மென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) Yes, Sir.

(இ) No new techniques in weaving or designing have been introduced in the Indian Institute of Handloom Technology, Salem since it has started functioning only this year.

(உ) Production of khadi does not form part of the syllabus.

TRUTH ALONE TRIUMPHS

[2nd March 1961

SRI V. SUBBIAH : இந்தவிதமான நுட்பத் தறிகளில் வேலை செய்யும் பயிற்சியைப் புகுத்தியிருப்பது எதிர்காலத்தில் விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு அறிகுறியா? அதற்குத்தான் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தத் தொழில் நுட்பப் பயிற்சி மூலமாக நல்ல உயர்ந்த ரகக் கைத்தறி நெய்யலாம். சாதாரணமாக வேஷ்டி, சேலைகள் பவர் லூமில் நெய்வது சுலபம். செலவும் குறைவு. இதற்கும் அதற்கும் முரண்பாடு இல்லை. இங்கே சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய உயர்ந்த ரக கைத்தறித் துணிகள் நெய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : சேலத்தில் ஏராளமான தறிகள் இருக்கின்றன. மிக உயர்ந்த துணி எல்லாம் நெய்யப்படுகின்றன. அவர்கள் தயார் செய்வதைக் காட்டிலும் வேறு என்ன உயர்ந்த ரகங்கள் இங்கே தயாரிக்கப்படுகின்றன? அங்கே இல்லாத ரகமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இது பயிற்சி அளிக்கக் கூடிய பள்ளிக்கூடம். இங்கே நெசவுத் தொழில் நடப்பதோடு எப்படி எப்படி நெய்யவேண்டுமென்ற போதனை அளிக்கப்படுகிறது. குறிப்பாக—"வீவிங் தியரி, வீவிங் ப்ராக்டீஸ், ஹாண்டு ஸ்பின்னிங், டிராயிங், ஜெனரல் டெக்ஸ்டைல் டெக்னாலஜி, க்ளாத் அனாலஜி, கலர் டிசைன்"—இந்தவிதமான பயிற்சிகள் எல்லாம் அளிக்கப் படும்.

SRI A. VEDARATHNAM : இந்தப் பயிற்சியை அளிப்பது யார் ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய ராஜ்யத்தில் இந்தவிதமான பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆசிரியர்களாக நியமித்திருக்கிறோம்.

SRI A. MARIAPPAN : இந்தப் பள்ளியில் குறுகிய காலப் பயிற்சி அளிப்பதாக இருந்ததே. அப்படி குறுகிய காலப் பயிற்சி அளிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறுகிய காலப் பயிற்சியைப் பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும். சற்றேறக் குறைய 3 வருஷம் உயர்ந்த ரகப் பயிற்சி அளிக்கக்கூடிய திட்டம் இது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இங்கே குறைந்த மாணவர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. நம்முடைய நாட்டு புராதமான தொழிலாகையால் இதில் அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது நாம் சுமார் 30 பேர்களுக்கு பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் தேவை அதிகரித்தால் சர்க்கார் அதற்கு ஏற்பாடு செய்யும்.